என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதைவிட அதற்கான முயற்சியில் இறங்கியிருப்பாரே யானால், அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்நேரம் அங்கே பண்ணை தொடங்கப்பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரணி பகுதியில் கால்நடைகளுக்கு தவிட்டுத் தீவனப் பற்றாக்குறை.

*வினா எண். 80 திரு ப. சந்திரன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு, ஆரணி பகுதியில் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் உள்ள தவிட்டை வாங்கிவிடுவதால் கால்நடைகளுக்கு உணவுத் தீவனமாக தவிடு கிடைக்காத குறையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) புகார்கள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, புகார்கள் பிறப்பிக்கப்பட்டதா, இல்லையா என்று பார்ப்பதை விட கால்நடையின் பாதுகாப்பிற்காக தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்து, கால் நடைகளுக்குத் தீவனமாக உணவுப் பொருளாக உபயோகப் படுத்தினால் நம்முடைய கால்நடைகள் வளர்ச்சியடையாதா? அதனால் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதை தவிர்த்து கால்நடைகளை வளர்ப்பதில், பாதுகாப்பதில், பராமரிப்பதில் இனிமேலாவது அரசு கவனம் செலுத்துமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்ட பின்னர் கூட அவை கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தீவனமாகப் பயன்படுத்த வாய்ப்பு உண்டு என்று கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார். எனவே இப் பிரச்னைக்கு இடம் இல்லை என்று கருதுகிறேன்.